# Path to Dharma

தர்ம நெறி **ஓம்** ධර්ම මාගීය



News Letter **5** செய்தி மடல்



## க்ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம்,
## ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.


Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.

ශ්‍රී ගණ දෙවි දේවාලය (වෙලේ), මුන්නේස්සරම, හලාවත, ශ්‍රී ලංකා.

hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com




**Sri Sankar Publications**


May **2008** மே

# Path to Dharma

தர்ம நெறி ॐ ධර්ම මාර්ගය



## News Letter 5 செய்தி மடல்



**க்ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம்,**
**ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.**

Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.
ශ්‍රී ගණ දෙවි දේවාලය (වෙලේ), මුන්නේශ්වරම, හලාවත, ශ්‍රී ලංකා.
hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com

Sri Sankar Publications

May 2008 மே

# News Letter - 5 -செய்தி மடல்

Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.

**க்ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம், ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.**

ශ්‍රී ගණ දෙවි දේවාලය (වෙලේ), මුන්නේස්සරම, හලාවත, ශ්‍රී ලංකා.

hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com

Edited by: B.S.Sarma , Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.

இச் செய்தி மடல் 19.05.2008, வைகாசி விசாக பௌர்ணமி அன்று அக் கோயிலில் இடம் பெற்ற கலந்துரையாடலில் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விளக்கங்களைக் கொண்டது.அனைவருக்கும் பயன்படும்.

1. திருவைந்தெழுத்து என்பது என்ன?

   திருவைந்தெழுத்து நமசிவாய எனப்படும். நமசிவாய என்ற திருவைந்தெழுத்து மந்திரம் வேதத்தின் நடுவனாகவும், நால்வர் பெருமக்களால் துதிக்கப்பட்டதாகவும் உயர்வு தருவதாகவும் உள்ள மந்திரம் ஆகும். இது தூல பஞ்சாக்ஷரம் எனப்படும். சூக்கும பஞ்சாக்ஷரம் , காரண பஞ்சாக்ஷரம் என்று சிறப்புப் பஞ்சாக்ஷரங்கள் உள்ளன. குருவின் மூலம் இது தூல பஞ்சாக்ஷர மந்திரத்தை உபதேசம் பெற்றவர்கள் அந்த திருவைந்தெழுத்து மந்திரத்தை உரிய முறையில் ஓதுவது சிறந்தது.

2. மந்திரம் என்பது என்ன?

   மந்திரம் ( மந் – நினைப்பவன்; திர – காப்பது ) என்பது அதனை நினைத்து உரிய முறையில் தியானஞ் செய்பவனைக் காக்கும் இயல்புடைய என்பதாகும். எனவே மந்திரம் என்னும் பெயர் நினைப்பவனைக் காக்கும் வாக்கியமாகிய சிவத்துக்கும் சிவ சத்திக்குமே செல்லும். எனவே மந்திரம், வாச்சிய மந்திரம், வாசக மந்திரம் என இரு வகைப்படும்.

3. மந்திரத்தை தியானஞ் செய்வதில், மானசம் என்பது என்ன?

   மானசம் என்பது நாக்கு நுனி, உதட்டைத் தொடாமல், ஓதுபவனின் மனதால் உரிய முறையில் உச்சரித்தலாகும்.

4. மந்திரம் ஜபித்தலில், உபாஞ்சு என்பது என்ன?

   உபாஞ்சு (மந்தம்) என்பது ஓதுபவன் தன் செவிக்கு மாத்திரம் கேட்கும்படி,
   நா நுனியானது உதட்டைத் தொட மெல்லச் ஜபித்தலாம்.

5. மந்திரம் ஜபித்தலில், வாசகம் என்பது என்ன?

   வாசகம் என்பது ஓதுபவன் தன் அருகிலிருக்கும் பிறர் செவிக்கும் கேட்கும்
   வகையில் ஜபித்தலாம். இது பாஷ்யம் என்றும் வழங்கப்படும்.

6. சரியை கிரியை யோகம் ஆகியவற்றால் முத்தி கிடைக்குமா? அல்லது ஞானம் பெற்றால்தான் முத்தியைப் பெற முடியுமா?

   சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன முறையே அரும்பு, மலர், காய், கனி
   போன்றவை என்பதைத் தாயுமானவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

   *"விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்*
   *அரும்பு மலர் காய் கனிபோல அன்றோ பராபரமே"*

   எனவே 'ஞானம்' என்பது சரியை முதலிய தவங்களின் விளைவே ஆகும். பக்தன் சரியை நெறியில் நின்று அதனைக் கடைப்பிடித்தால் மலநீக்கம் பெற்று வீடுபேறு எய்தலாம். அவ்வாறே கிரியை நெறியில் நின்று அதனைக் கடைப்பிடித்தால் மலநீக்கம் பெற்று வீடுபேறு எய்தலாம். மலநீக்கம் பெற்று வீடுபேறு எய்தலாம். அவ்வாறே யோக நெறியில் நின்று அதனைக் கடைப்பிடித்தால் மலநீக்கம் பெற்று வீடுபேறு பெறமுடியும். அவ்வாறே ஞான நெறியில் நின்று அதனைக் கடைப்பிடித்தால் மலநீக்கம் பெற்று வீடுபேறு எய்தலாம்.

   சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளில் ஏதேனும் ஒரு நெறியை உண்மையாக கடைப்பிடித்தால் மலநீக்கம் பெற்று வீடுவேறு பெறமுடியும் என்பதை மெய்ப்படுத்தும் பொருட்டு அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய

சிவனடியார்கள் நால்வரையும் இறைவன் எமக்கு வழிகாட்டவைத்துள்ளான். இந்நான்கு நெறிகளும் இறைவனை அடையும் நெறிகள்.
இவ்வுண்மையைச் சிவஞானசித்தியாரில், அருணந்திசிவம் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார்.

*"ஞானம், யோகம், கிரியை, சரியை நாலும்*
*நாதன்தன் பணி ஞான நாலினுக்கும் உரியன்."*

7. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளில் இறைவனுக்கும் பக்தனுக்கும் (நமக்கும்) உள்ள உறவுமுறை எவ்வாறு இருக்கும்?
   i. சரியை நெறியில், இறைவனுக்கும் பக்தனுக்கும் (நமக்கும்) உள்ள உளவு முறை, ஆண்டானுக்கும் அடிமைக்கும் உள்ளது போன்றது.
   Ii கிரியை நெறியில், இறைவனுக்கும் பக்தனுக்கும் (நமக்கும்) உள்ள உளவு முறை, தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவு முறை போன்றது.
   iii. யோக நெறியில், இறைவனுக்கும் பக்தனுக்கும் (நமக்கும்) உள்ள உளவு முறை, தோழனுக்கும் தோழனுக்கும் உள்ள உறவு முறை போன்றது.
   Iv ஞானநெறியில், இறைவனுக்கும் பக்தனுக்கும் (நமக்கும்) உள்ள உளவு முறை, குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவுமுறை போன்றது. இந்நெறியில் உள்ள உறவு முறை நாயகனுக்கும் நாயகிக்கும் உள்ளது போன்றதென சிலர் கூறுகிறார்கள்.
8. சிவஞானசித்தியாரில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளில் உள்ள உறவுமுறை பற்றி கூறுவது என்ன?
   சிவஞானசித்தியாரில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளில் உள்ள உறவுமுறை பற்றிய உண்மையை

   "சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம்,
   தாதமார்க்கம் என்றும் சங்கரனை அடையும்
   நன்மார்க்கம் நால், அவைதாம் ஞான யோக
   நற்கிரியா சரியை என நவிற்றுவதும் செய்வர்"

   என்று அருணந்திசிவம் தெளிவுறுத்தியுள்ளார்.
9. சரியை நெறி (உடலால் செய்யும்) வழிபாட்டின் சிவப்பணிகள் என்ன?
   சரியை நெறி வழிபாட்டின் சிவப்பணிகள் பின் வருமாறு :-
   i. திருக்கோயில்களில் உள்ளும் புறமும் பெருக்கித் துப்புரவு செய்தல்
   ii. திருக்கோயிலில் உள்ள தரையைச் சுத்தமான பசுவின் சாணம் கொண்டு மெழுகுதல்.
   iii. அதிகாலையில் குளித்து, வண்டுகள் மொய்ப்பதற்கு முன், மலர்களை கொய்து திருக்கோயிலில் கொடுத்தல்.
   iv. பூச்சரங்களையும், பூமாலைகளையும் தொடுத்துத் திருக்கோயிலில் சேர்ப்பித்தல்.
   v. திருக்கோயிலில் பன்னிரு திருமுறைப் பாடல்களை பக்தி பரவசத்துடன் பாடுதல்.
   vi. திருக்கோயிலில் நெய், எண்ணெய் முதலியவற்றால் தீபம் ஏற்றுதல்.
   vii. திருக்கோயிலில் திருநந்தவனம் அமைத்தல்.
   viii. திருக்கோயிலில் சிவனை வழிபடும் பக்தர்களுக்கு உதவிசெய் தல்.
10. கிரியைநெறி (மனமும் உடலும் கொண்டு செய்யும்) வழிபாட்டின் சிவப்பணிகள் என்ன?
    கிரியை நெறி எமது வீடுகளில் செய்யும் வழிபாடு ஆகும். வீட்டிலுள்ளவர்கள் அனைவரது உதவியோடு வழிபாடு செய்யும் தெய்வத்தை (உபாசன மூர்த்தத்தை) வீட்டில் நிறுவி திருமுறைகளை அன்புடன் கசிந்துருகிப் பாடுதல்.
11. யோகநெறி (மனத்தினால் செய்யும்) வழிபாட்டில் சிவப்பணிகள் என்ன?
    பக்தன் தன்னுடைய பொறி புலன்களை ஒடுக்கி, சுவாசத்தை ஒருவழிப்படுத்தி, இறைவனோடு (சிவபெருமானோடு) ஒன்றிய உணர்வோடு மனத்தைப் பழக்குவதே, யோக நெறியில் செய்யும் வழிபாடு. இது சிவயோகம் என ப்படும்.
12. ஞானநெறி வழிபாட்டின் சிவப்பணிகள் என்ன?
    இது சைவம் கூறும் சன்மார்க்கம். இந்நெறியில் பக்தன் சிவாகமங்களில் கூறப்பட்ட பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மையையும், இயல்பையும் தெளிவாக அறிதல் வேண்டும். அவ்வறிவின் பலனால், ஞானம் உண்டாகும். அப்போது இறைவனை அறியும் உணர்வு ஏற்படும்.
13. 'ஞானத்தில் சரியை', 'ஞானத்தில் கிரியை','ஞானத்தில் யோகம்' 'ஞானத்தில் ஞானம்' முதலிய நான்கு வழிகளில் நின்று ஒழுகினால் இப்பிறப்பிலேயே கிட்டும் முத்தியின் பலன் சமமாக இருக்குமா?

'ஞானத்தில் சரியை', 'ஞானத்தில் கிரியை','ஞானத்தில் யோகம்' 'ஞானத்தில் ஞானம்' முதலிய அந் நான்கு வழிகள் வருமாறு :-

i. 'ஞானத்தில் சரியை' என்பது, திருமுறைகள் மற்றும் சைவசித்தாந்தப் பொருள்களைப்பற்றித் தக்கவர்களிடம் 'கேட்டல்' ஆகும்.
ii. 'ஞானத்தில் கிரியை' என்பது, அவற்றைக் காரண காரிய இயைபுபடுத்தி எடுத்துக்காட்டுக்களையும் கருத்தில் கொண்டு 'சிந்தித்தல்' ஆகும்.
iii. 'ஞானத்தில் யோகம்' என்பது அவற்றைச் சந்தேகமோ விபரீதமோ இன்றித் தெளிதல் ஆகும்.
iv. 'ஞானத்தில் ஞானம்' என்பது, அவ்வாறு தெளிவடைந்த பிறகு, அறிவும் இல்லை; என்று நினைந்த 'இறைவனையே (சிவபெருமானையே) சதாகாலமும் நினைந்திருத்தல்' ஆகும். இதனை 'நிட்டை கூடுதல்' என்று சாத்திரங்கள் பேசும்.

14. பரஞானம், அபரஞானம் என்றால் என்ன?

சரியை முதலிய நான்கினுள் இறுதியில் உள்ள ஞானத்தை இருவகையாகப் உணர்ந்து கொள்ளவேண்டும். ஒன்று அபரஞானம்; மற்றொன்று பரஞானம். பரஞானம் என்பது, சாத்திரங்களைக் கற்றலும், பதி, பசு, பாச உண்மைகளை ஆராய்தலும் ஆகும். அபர ஞானமானது, பரஞானத்தைக் கூட்டுவிக்கும்; சாத்திரங்களைக் கற்பதோடு அமையாது, சரியை, கிரியை, யோகங்களுக்கு அங்கமாக சாத்திரங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். சரியை, கிரியை, யோகங்களின் மூலமும் சாத்திர ஞானத்தின் மூலமும் நாம் இறைவனிடத்து, பத்தியை (அன்பை) வளர்த்துக் கொள்ள வேண்டும். அன்பின் முதிர்வில் இறைவன் குருநாதனாக வந்து 'பரஞானம்' ஆகிய வியாபக உணர்வை நமக்கு உணர்த்துவான். வியாபக உணர்வின் மூலந்தான், இறைவனோடு இரண்டறக் கலந்து, பேரின்பத்தை அனுபவிக்க முடியும். எனவே பரஞானத்திற்கு பத்தி மிகவும் இன்றியமையாதது.

இவ்வுண்மையைத்தெளிவுபடுத்திச் சிவஞானசித்தியாரில்,

*"கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை*
*கிளத்தல் என ஈர் இரண்டாம்; கிளக்கின் ஞானம்*
*வீட்டை அடைந்திடுவர்" (சிவஞானசித்தியார் – 276)*

என்று அருணந்திசிவம் அருளிச் செய்துள்ளார்.

15. இலிங்கம் என்றால் என்ன?

இலிங்கம் என்தற்குக் குறி என்று பொருள். முகம் கை கால் போன்ற அவயவங்கள் இல்லாமல் இறைவனைக் குறிப்பாக உணர்த்துவதால் இத்திருமேனிக்கு இலிங்கம் எனப் பெயர்.

16. புராணத்தில் இலிங்கம் எவ்வாறு தோன்றியது எனக்கூறப்பட்டுள்ளது?

பிரமனும், திருமாலும் தம்மிடையே பெரியவர் யார் எனச் சச்சரவிட அவர்கள் முன் சிவபெருமான் சோதி வடிவாகத் தோன்றினார். அவ்விருவரும் அச்சோதியின் முதலும் முடிவும் காணாது வருந்த, அச்சோதி வழிபாட்டிற்கு ஏற்ற சிவலிங்கமாகத் திடமானது. அச்சிவலிங்கத்தை வழிபட்டு அவர்கள் பேறு பெற்றனர். தன்னிலையில் அருவமான பரசிவம் உயிர்களுக்கு இரங்கித் தன் கருணையால் அருவுருவத் திருமேனி கொண்டதே சிவலிங்கத் திருமேனி என்பதை உய்த்துணர்க.

17. சிவலிங்கம் எத்தனை வகைப்படும்?

பரார்த்த லிங்கம், இஷ்ட லிங்கம் என இருவகைப்படும்

18. பரார்த்த லிங்கம் என்பது என்ன?

இறைவன்(சிவபெருமான்) சங்கார காலம் வரையும் சாந்நித்தியராய் இருந்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கும் போது இலிங்கமாம். இது, தாவரலிங்கம் எனவும் பெயர் பெறும்.

19. பரார்த்த லிங்கம் எத்தனை வகைப்படும்?

சுயம்பு லிங்கயம்,காண லிங்கம், தைவிக லிங்கம், ஆரிட லிங்கம், மானுட லிங்கம் என ஐவகைப்படும். இவைகளுள்ளே, சுயம்பு லிங்கம் தானே தோன்றியது. காண லிங்கம் விநாயகர், சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவித லிங்கம் விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிட லிங்கம் இருடிகளாலும், அசுரர், இராக்கதர் முதலாயினராலும் தாபிக்கப்பட்டது. அது மானுட லிங்கம் மனிதரால் தாபிக்கப்பட்டது.

20. ஆன்மாக்கள் பூசித்து வழிபடப்படும் சதாசிவ வடிவம் என்பது என்ன?

பீடமும் இலிங்கமுமாகிய கன்ம, சாதாக்கிய வடிவம். இலிங்கம் சிவம், பீடம் சிவசக்தி.

21. சிவபெருமான் இவ்விடங்களில் நிற்பர் என்பது அவர், எங்கும் வியாபகர் என்றதனோடு வேறுபடுமா?

சிவபெருமான் இவ்விடங்களில் நிற்பர் என்றது அவர், எங்கும் வியாபகர் என்றதனோடு மாறுபடாது. சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களில் மாத்திரமே தயிரில் நெய் போல விளங்கி நிற்பர். மற்றை இடங்களில் எல்லாம் பாலில் நெய் போல வெளிப்படாது நிற்பர்.

22. இஷ்டலிங்கம் என்பது என்ன?

ஆசாரியார், உபதேசபடி சீடன் நாள்தோறும் சிவபூசை செய்வதற்கு; ஆசாரியார் கொடுத்து, சீடன் வாங்கிப் நாள்தோறும் பூசிக்கும் இலிங்கம் இது. ஆன்மார்த்த லிங்கம், சல லிங்கம் எனவும் பெயர் பெறும்.

23. இஷ்டலிங்கம் எத்தனை வகைப்படும்?

சணிக லிங்கம், பா(வா)ண லிங்கம், படிக லிங்கம், இரத்தின லிங்கம், சைல லிங்கம், எனப் பலவகைப்படும்.

24. சணிக லிங்கம் என்பது என்ன?

சணிக லிங்கம் பூசித்தவுடன் விடப்படும் இலிங்கமாகும்.

25. சணிக லிங்கம் எத்தனை வகைப்படும்?

மண், அரிசி, அன்னம் (சோறு), ஆற்று மணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், பூ மாலை, சர்க்கரை, மா எனப் பன்னிரண்டு வகைப்படும்.

26. ருத்திராக்ஷம் என்பது என்ன?

சிவபெருமானின் மூன்று திருக்கண்களினின்றும் பொழிந்த நீரில் தோன்றிய மணி ருத்திராக்ஷம் என்றும் வழங்கும். (ருத்திரன் – சிவன், அக்ஷம் – நேத்திரம். ) சிவபூசை செய்கிறவர்கள் கழுத்தில் ருத்திராக்ஷ கண்டிகை தரித்துக்கொள்வர்.

27. தீட்சை (தீக்ஷ) என்பது யாது?

தீக்ஷ என்ற வடசொல் திரிந்து தீட்சை (தீக்கை) ஆயிற்று. தீ – கெடுத்தல்; ¨க்ஷ – கொடுத்தல். அதாவது பாசத்தைக் கெடுத்து மோட்சத்தை(ஞானத்தை)த் தரும்பொருட்டு குருவிடமிருந்து பெறும் மந்திர உபதேசம் பொதுவாகத் 'தீட்சை (தீக்ஷ)) எனப்படும்.

28. தீட்சை (தீக்ஷ) எத்தனை வகைப்படும்?

தீட்சையில் மூன்று முக்கியமான வகைகள் உள்ளன.அவை பின்வருமாறு :-

i. சமயத் தீட்சை :- சைவசமயிக்குச் சமயத் தீட்சை அவசியமாகும். சமய தீட்சை பெறாதவர் சைவசமய ஆகார்."

ii. விசேட தீட்சை :- இந்தத் தீட்சை பெற்றவரே சிவலிங்க மூர்த்தியையோ, மகேசுவர மூர்த்தியையோ எழுந்தருளச் செய்து குருவிடம் பெற்றுச் 'சிவபூசை' செய்வதற்குரிய தகுதி உடையவர்.

iii. நிர்வாண தீட்சை :- பாச பந்தம் அனைத்தையும நீக்கிச் சிவபெருமான் திருவடியை அடையும்படி செய்யும் தீட்சை நிர்வாண தீட்சையாகும். இந்தத் தீட்சையில் குருநாதர், சீடனது ஆறு அத்துவாக்களிலும் சஞ்சிதமாயிருக்கும் கன்மங்களைப் நீக்கி மலத்தை நீக்குவார்.

29. தீட்சை (தீக்ஷ) யெத்தனை வகைப்படும்? அவை யாவை?

தீட்சை (தீக்ஷ) ஆறு வகைப்படும். அவை பின்வருமாறு :-

சக்ஷு தீட்சை (தீக்ஷ) , ஸ்பரிச தீட்சை (தீக்ஷ) , வாசக தீட்சை (தீக்ஷ) , மானச தீட்சை (தீக்ஷ) , சாஸ்திர தீட்சை (தீக்ஷ) யாம்.

(1) சக்ஷு தீட்சை (தீக்ஷ) அத்துவா மார்க்கம் குறியாது குறித்துச் சுருக்கிப் பாசம் கழலப் பார்த்தல்.

(ii) ஸ்பரிச தீட்சை (தீக்ஷ) சீடனின் மனதில் சிவ அத்தம் வைத்தல்.

(iii) வாசக தீட்சை (தீக்ஷ) பதினொரு மந்திரத்தோடு பஞ்சாக்ஷரத்தை சீடனின் மனதில் உபதேசித்தல்.

(iv) மானச தீட்சை (தீக்ஷ) யோகமார்க்கத்தால் சீடனின் மனதில் பிரவேசித்துச் சிந்தித்தல் .

(v) சாஸ்திர தீட்சை (தீக்ஷ) ஆகமப்பொருளை சீடனின் மனதில் உபதேசித்தல்.

(vi) யோக தீட்சை (தீக்ஷ) யோக மார்க்கத்தால் சீடனின் மனதில் பிரவேசித்தல்.

30. முக்தி (வீடுபேற்றை)ப் அடைவதற்ககான வழி யாது?

அருணந்திசிவம் சிவஞானசித்தியாரில் பின்வருமாறு காட்டியுள்ளார்.

*"ஞானநூல் தனைஓதல்; ஓதுவித்தல்;*
*நற்பொருளைக் கேட்பித்தல்; தான் கேட்டல், நன்றாய்*
*ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்*
*இறைவன் அடி அடைவிக்கும் எழில் ஞானபூசை"*–சிவஞானசித்தியார் (275)

1. ஒருவர் ஞானத்தை ஏற்படுத்தும் பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் முதலில் தான் கற்க வேண்டும்;

2.பின்னர் அவற்றின் பொருள் நுட்பங்களை நல்லாசிரியரிடம் (குருவின் மூலம்) கேட்டுக் கற்க வேண்டும்;

3.பின்னர் பிறருக்கும் கற்பிக்க வேண்டும்;
4.பின்னர் பிறருக்கும் எளிமையாக எடுத்துரைக்க வேண்டும்;
5.பின்னர் அத்தகு அரிய பெரிய பொருள்களைப்பற்றிய சிந்தனையுடன் இருக்க வேண்டும்.

31. திருக்கோயிலுக்கு எப்படிச் செல்ல வேண்டும்?
குளித்துத் தூய்மையான ஆடை அணிந்து, திருநீறு அணிந்து, சிவ சிந்தனையுடன் செல்ல வேண்டும்.

32. திருக்கோயிலுக்கு அண்மையில் சென்றவுடன் என்ன செய்ய வேண்டும்?
தூல இலிங்கமாகிய திருக்கோபுரத்தை வழிபட்டு, இரண்டு கைகளையும் தலைமேல் குவித்து இறைவன் சிந்தனையுடன் உள்ளே செல்ல வேண்டும்.

33. திருக்கோயிலுக்கு உள்ளே போனவுடன் என்ன செய்தல் வேண்டும்?
பலி பீடத்துக்கு முன் வீழ்ந்து வணங்க வேண்டும்.

34. கிழக்கு நோக்கிய திருக்கோயிலிலும் மேற்கு நோக்கிய திருக்கோயிலிலும் எந்தத் திக்கிலே தலை வைத்து வணங்க வேண்டும்?
வடக்கே தலை வைத்து வணங்க வேண்டும்.

35. தெற்கு நோக்கிய திருக்கோயிலிலும் வடக்கு நோக்கிய திருக்கோயிலிலும் எந்தத் திக்கிலே தலை வைத்து வணங்க வேண்டும்?
கிழக்கே தலை வைத்து வணங்க வேண்டும்.

36. எந்தத் திக்குகளில் கால் நீட்டி வணங்கக் கூடாது?
கிழக்கிலும், வடக்கிலும் கால் நீட்டி வணங்குதல் ஆகாது.

37. அஷ்டாங்க நமஸ்காரம் என்பது என்ன?
தண்ட அஷ்டாங்கம் நான்கு வகைப்படும்.
i) தண்டம் என்னும் அஷ்டாங்க நமஸ்காரம்,இரு கைகள்,இரு கால்கள், மார்பு, சிரசு, வாக்கு மனம் ஆகிய எட்டுறுப்புக்களாலுஞ் செய்யப்படுவது. இது ஒரு வகை.
ii) இரு கைகள்,இரு கால்கள், மார்பு, சிரசு, வாக்கு, மனம், புத்தி, பார்வை, ஆகிய வற்றால் செய்யப்படுவது மற்றொரு வகை.
iii) இரு கைகள், இரு கால்கள், இரு முழங்கால்கள், மார்பு, சிரசு, மனம், வாக்கு, பார்வை ஆகிய வற்றால் செய்யப்படுவது பிறிதொரு வகை.
iv) இரு கால்கள், இரு புயங்கள், சித்தம், மார்பு, சிரசு, மனம், வாக்கு, பார்வை ஆகிய வற்றால் செய்யப்படுவதென்பது வேறொரு வகை.

38. பஞ்சாங்க நமஸ்காரம் என்பது என்ன?
i) சிரசு, இருகைகள், இருமுழங்கால்கள் என்னுமிவற்றால் பூமியைப் பொருந்தச் செய்யப்படும் பஞ்சாங்க நமஸ்காரம் ஒரு வகை.
ii)சிரசு, இரு கைகள், இரு புயங்கள், ஆகியவை முழங்காலில் பொருந்தச் செய்யப்படும் பஞ்சாங்க நமஸ்காரம் மற்றொரு வகை.

39. திரியங்க நமஸ்காரம் என்பது என்ன?
இரண்டு கைகளையும் சிரசில் குவித்துக்கொண்டு செய்யப்படும் நமஸ்காரம்.

40. ஏகாங்க நமஸ்காரம் என்பது என்ன?
ஏகாங்க நமஸ்காரம் சிரசால் ம ட்டும் வணங்கப்படுவதாகும்.

41. ஆடவர்கள் எப்படி வணங்க வேண்டும்?
ஆடவர்கள் எட்டு உறுப்புக்களும் நிலத்தில் பட வணங்குதல் வேண்டும்.

42. எட்டு உறுப்பு வணக்கம் என்பது என்ன?
தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குதல்.

43. பெண்கள் எப்படி வணங்க வேண்டும்?
பெண்கள் ஐந்து உறுப்புகள் நிலம் தோய வணங்குதல் வேண்டும்.

44. ஐந்து உறுப்பு வணக்கம் என்பது என்ன?
தலை, கை இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குதல்.

45. எத்தனை முறை விழுந்து வணங்க வேண்டும்?
மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது முறை விழுந்து வணங்க வேண்டும். ஒரு முறை, இருமுறை வணங்கலாகாது.

46. விழுந்து வணங்கிய பின் என்ன செய்தல் வேண்டும்?
திருக்கோயில் திருச்சுற்றினை வலம் வரல் வேண்டும்.

47. எவ்வாறு வலம் வரல் வேண்டும்?
சிவ சிந்தனையுடன் கால்களை மெல்ல வைத்து வலம் வரல் வேண்டும்

48. எத்தனை முறை வலம் வரல் வேண்டும்?

மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது முறை வலம் வர வேண்டும்.

49. சிவஸ்தலங்களைத் தரிசனஞ் செய்ய வேண்டிய முறை என்ன?

விநாயகர், மூலஸ்தானம் (மூலலிங்கம்), அம்மையார், நடராஜ (சபாபதி)மூர்த்தம், சோமாஸ்கந்தமூர்த்தம், பரிவார தேவர்கள், சண்டேசுரர், பயிரவர் என்னும் மூர்த்தங்களைக் பூசிக்க (தரிசிக்க) வேண்டும்.

50. விநாயகரை எவ்வாறு வழிபட வேண்டும்?

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக் காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு, மூன்று முறை தாழ்ந்தெழுந்து வழிபடல் வேண்டும்.

51. வழிபாடு முடிந்தவுடன் என்ன செய்தல் வேண்டும்?

சண்டேசுரர் கோயிலை அடைந்து வழிபட்டு, கோயிலிலிருந்து பிரசாதம் எடுத்துச் செல்ல இருப்பின் அவர் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு இல்லையெனின் கைகளைத் தடவி ஏதும் கொண்டு செல்லவில்லையெனத் தெரிவித்துச் சிவவழிபாட்டுப் பலனைத் தரும்படி வேண்ட வேண்டும்.

52. சண்டேசர் வழிபாட்டின் பின் என்பது என்ன?

கொடிமரம் முன்னர்ச் சென்று விழுந்து வணங்கி திருவைந்தெழுத்தை (நமசிவாய) உரிய முறையில் செபித்து பின் எழுந்து வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

53. திருக்கோயிலில் செய்யத் தகாதன யாவை?

வீண் வார்த்தை பேசுதல், ஒழுக்கம் இல்லாது செல்லல், கால் கழுவாது செல்லல், எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்கு நீர் சிந்துதல், மயிர் வாரி முடித்தல், சூதாடல், வெற்றிலை பாக்கு இட்டுக் கொள்ளுதல் , தலையில் ஆடை தரித்துக் கொள்ளுதல், தோளிலே துண்டு தரித்துக் கொள்ளுதல், காலணி தரித்துக் கொள்ளுதல், பூசித்துக் கழித்த பொருள்களை மிதித்தல், கொடி மரம், பலி பீடம், திருமேனி என்னும் இவைகளின் நிழலை மித்தல், இறைவனுக்கும் பலி பீடத்துக்கும் குறுக்கே போதல் முதலியவைகளாம்.

54. சோமசூக்தப் பிரதக்ஷணமென்பது என்பது என்ன?

பிரதக்ஷணம் செய்யத் தொடங்கும்போது நந்திதேவரைத் தரிசித்துக்கொண்டு அங்கிருந்தபடியே இடமாகச் சென்று சண்டேச நாயனாரைத் தரிசித்துச் சென்ற வழியே திரும்பிவந்து மறுபடியும் நந்திதேவரைத் தரிசித்து அங்கிருந்து வலமாகச் சென்று சண்டேச நாயனாரைத் தரிசித்துத் திரும்பிவந்து நந்திதேவரைத் தரிசித்துப் பின்பு சிவலிங்க தரிசனஞ் செய்து பணியவேண்டும். இவ்வாறு ஒரு பிரதக்ஷணஞ் செய்தால் அனந்தம் பலனுண்டு. பிரிந்து வருகின்றபடியே பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். இந்தப் பிரதக்ஷணம் பிரதோஷ காலத்திற் செய்தால் விசேஷமான பலனுண்டு.

55. பிரதோஷ காலம் என்பது என்ன?

பகல் இருபத்தாறேகால் நாழிகைக்கு மேற்பட்ட மூன்றே முக்கால் நாழிகையளவும் சூரியாஸ்தமனமான மூன்றே முக்கால் நாழிகைக்கு உட்பட்டதுமான காலம் பிரதோஷகாலம். இக்காலத்திற் சிவதரிசனஞ் செய்வது அவசியம்.

56. சப்த தியாகர்களின் திருநாமங்கள், நடனங்கள் எவை?

1. திருவாரூர், வீதிவிடங்கர் – அசபாநடனம்.
2. திருநள்ளாறு, நகவிடங்கர் – உன்மத்தநடனம்.
3. திருநாகை, சுந்தரவிடங்கர் – அலைநடனம்.
4. திருவாய்மூர், நீலவிடங்கர் – கமலநடனம்.
5. திருமறைக்காடு, புவனிவிடங்கர் – அமிர்தநடனம்.
6. திருக்கோளிலி, அவனிவிடங்கர் – பிரமரநடனம்.
7. திருவொற்றியூர், மாணிக்கவிடங்கர் – வகுளநடனம்.

57. ஆறு ஆதார ஸ்தலங்கள் எவை?

- i. திருவாரூர்–மூலாதாரம்
- ii. திருவானைக்கா–சுவாதிஷ்டானம்
- iii. திருவண்ணாமலை–மணிபூரகம்
- iv. சிதம்பரம்–அநாகதம்
- v. திருக்காளத்தி–விசுத்தி
- vi. காசி–ஆக்ஞை

58. பிண்ட ஸ்தலங்கள் எவை?

- i. ஸ்ரீபர்வதம்– சிரசு
- ii. கேதாரம் – லலாடம்
- iii. காசி – புருவ மத்தியம்
- iv. சிதம்பரம் – இருதயம்
- v. திருவாரூர் – மூலாதாரம்
- vi. குருக்ஷேத்திரம்– குதஸ்தானம்

59. பஞ்சபூத ஸ்தலங்கள் எவை?

பிருதுவி– திருவாரூர், அப்பு– திருவானைக்கா, தேயு– திருவண்ணாமலை, வாயு– திருக்காளத்தி, ஆகாயம்– சிதம்பரம்.

60. நாடி ஸ்தலங்கள் யாவை?

i. இலங்கை – இடைகலை, ii. இமயம் – பிங்கலை, iii. தில்லை – சுழுமுனை.

61. சைவ சமயக் குரவர்கள் என்பவர்கள் யார்?

சைவத்தின் வழியே உய்வு பெறும் வழியினைத் தம் பாடல்கள் மூலம் அருளிப் பல அற்புதங்களைக் கொண்டு சைவ சமயமே மெய்ச் சமயம் என்று நிலைநாட்டியவர்கள் சைவ சமயக் குரவர்கள் (குருமார்கள்).

62. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் செய்த அற்புதங்கள் சில கூறுக?

i.மூன்றாம் வயதிலே உமாதேவியார் பொற்கிண்ணத்தில் ஊட்டிய திருமுலைப்பாலை உண்டமை.

ii.சிவபெருமானிடத்திலே பொற்றாளமும், முத்துப் பல்லக்கும், முத்துச் சின்னமும், முத்துக் குடையும், முத்துப் பந்தரும், உலவாக்கிழியும், படிக்காசும் பெற்றமை.

iii.திருமறைக்காட்டிலே வேதங்களினாலே பூட்டப்பட்டுத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பதிகத்தினாலே திறக்கப்பட்ட திருக்கதவு அடைக்கப் பாடியமை.

iv.பாலை நிலத்தை நெய்தல் நிலம் ஆகும்படி பாடியமை.

v.பாண்டியனுக்குக் கூனையும், சுரத்தையும் போக்கியமை.

vi.சமணர்கள் எதிரே தேவாரத் திருவேட்டை தீயிலே போட்டுப் எரியாது எடுத்தமை.

vii.வைகை ஆற்றிலே திருவேட்டைப் போட்டு எதிர் ஏறும்படி செய்தமை.

viii.புத்த நந்தியுடைய தலையில் இடி விழச் செய்தமை.

ix.ஆற்றிலே தாமும் அடியவர்களும் ஏறிய ஓடத்தைத் திருப்பதிகத்தினாலே கரை சேர்த்தமை.

x.ஆண் பனைகளைப் பெண் பனைகளாக ஆக்கியமை.

xii.விடத்தினால் இறந்த வணிகனை உயிர்ப்பித்தமை.

xii.விடத்தினால் இறந்த பெண்ணுடைய எலும்பைப் பெண் ஆக்கியமை.

xiii.தமது திருக்கல்யாணம் தரிசிக்க வந்தவர்கள் எல்லாரையும் தம்மோடு தீயிலே புகுவித்து முத்தியிலே சேர்த்தமை.

63. திருநாவுக்கரசு நாயனார் செய்த அற்புதங்கள் சில கூறுக?

I. சமணர்களாலே ஏழு நாள் சுண்ணாம்பு அறையிலே பூட்டப்பட்டு இருந்தும் வேகாது பிழைத்தமை.

II. சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற் சோற்றை உண்டும் சாவாது பிழைத்தமை.

III. சமணர்கள் விடுத்த யானையினால் வலம் செய்து வணங்கப் பட்டமை.

IV. சமணர்கள் கல்லிலே சேர்த்துக் கட்டிக் கடலிலே இடவும், அக்கல்லே தோணியாகக் கரை ஏறியமை.

V. சிவபெருமானிடத்தில் படிக்காசு பெற்றமை.

VI. திருமறைக்காட்டிலே வேதங்களால் பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கப்பாடியமை.

VII. விடத்தினாலே இறந்த பிள்ளையை உயிர்ப்பித்தமை.

VIII. கயிலைக்குச் செல்லும் வழியில் ஒரு தடாகத்தின் உள்ளே முழுகித் திருவையாற்றில் ஒரு வாவியின் மேலே தோன்றிக் கயிலைக் காட்சி கண்டமை.

64. சுந்தரமூர்த்தி நாயனார் செய்த அற்புதங்கள் சில கூறுக?

I. செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டமை.

II. சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாசலத்தில் உள்ள மணி முத்தாறு ஆற்றிலே போட்டுத் திருவாரூரில் உள்ள குளத்திலே ( கமலாலயம் ) எடுத்தமை.

III. சிவபெருமான் திருவருளால் இழந்த இரு கண்களின் பார்வையையும் மீண்டும் பெற்றமை.

IV. சிவபெருமானையே பரவையார் மனைக்குத் தூதராக்கியமை.

V. காவேரி ஆறு பிரிந்து வழிவிடச் செய்தமை.

VI. முதலை விழுங்கிய பிள்ளையை அம்முதலை வாயினின்று அழைத்துக் கொடுத்தமை.

VII. வெள்ளை யானையில் ஏறிக்கொண்டு திருக்கயிலாயத்திற்கு எழுந்தருளியமை.

65. மாணிக்கவாசக சுவாமிகள் செய்த அற்புதங்கள் சில கூறுக?

I. சிவபெருமானையே நரியைக் குதிரை ஆக்கிக் கொண்டு வருமாறும், மண் சுமந்து அடி படுமாறும் செய்தமை.

II. புத்தர்களை வாதினில் வென்று ஊமைகள் ஆக்கிப் பின் ஊமம் தீர்த்துச் சைவர்கள் ஆக்கியமை.

III. பிறவி முதல் ஊமையாய் இருந்த ஒரு பெண்ணை ஊமம் தீர்த்துப் புத்தர்கள் வினாவிய வினாக்களுக்கு விடை சொல்லும்படி செய்தமை.

IV. தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து எழுதும்படி பெற்றுக் கொண்டமை.

V. எல்லாரும் காணப் பொற்சபையின் உள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தமை.

66. ஞானகாண்டப் பொருளைச் விளக்கும் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கள் எவை?

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப் பற்றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்குமாம்.

67. திருவுந்தியாரை அருளிச் செய்தவர் யார்?

உய்யவந்த தேவ நாயனார்.

68. திருக்களிற்றுப்படியாரை அருளிச் செய்தவர் யார்?

திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார். இவர் திருவுந்தியாரை அருளிச் செய்த உய்யவந்த தேவ நாயனாருடைய சீடராகிய திருவியலூர் ஆளுடைய தேவ நாயனாருடைய சீடர்.

69. சிவஞான போதத்தை அருளிச் செய்தவர் யார்?

திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர். இவருக்குச் சுவேதவனப் பெருமாள் என்பது பிள்ளைத் திருநாமம்.

70. சிவஞான சித்தியார், இருபா இருபது என்னும் இரண்டையும் அருளிச் செய்தவர் யார்?

சகலாகம பண்டிதர் என்னும் காரணப்பெயர் பெற்ற திருத்துறையூர் அருணந்தி சிவாச்சாரியார். இவர் மெய்கண்ட தேவருடைய சீடர் நாற்பத்தொன்பதின்மருள்ளே தலைவர்.

71. உண்மை விளக்கத்தை அருளிச் செய்தவர் யார்?

திருவதிகை மனவாசகங் கடந்தார். இவர் மெய்கண்ட தேவருடைய சீடர்களுள் ஒருவர்.

72. சிவப்பிரகாசம் முதலிய மற்றைய எட்டு சித்தாந்த சாத்திரங்களையும் அருளிச் செய்தவர் யாவர்?

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார். இவர் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவர். இவர் அருணந்தி சிவாச்சாரியாருடைய சீடராகிய திருப்பெண்ணாகட மறைஞானசம்பந்தரின் சீடர்.

73. மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்த சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் என்னும் நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவர்?

திருக்கயிலாய பரம்பரைச் சந்தான குரவர் எனப் பெயர் பெறுவர்.

74. மெய்கண்ட தேவரின் ஆசாரியார்கள் யார்?

திருக்கயிலாய மலையினின்றும் எழுந்தருளி வந்த பரஞ்சோதி மாமுனிவர்.

75. பரஞ்சோதி மாமுனிவரின் ஆசாரியார் யார்?

சத்தியஞான தரிசனிகள்.

76. சத்தியஞான தரிசனிகளுக்கு ஆசாரியார் யார்?

சனற்குமார மாமுனிவர்.

77. சனற்குமார மாமுனிவரின் ஆசாரியார் யார்?

திருநந்தி தேவர்.

78. திருநந்தி தேவரின் ஆசாரியர் யார்?

திருநீலகண்ட பரமசிவன்.



